## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததற்கிணங்க

# நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்** தலைமையில் 14.5.2026 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற **"தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்" அறிவித்ததற்கிணங்க;**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து **"கள ஆய்வு"** செய்வதற்காக **38 பேர் கொண்ட குழு அமைக்கப்படுகிறது.** இக்குழுவானது, கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டத்திற்குட்பட்ட தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு மாவட்டச் செயலாளர்கள் - வேட்பாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்களை நேரடியாகச் சந்தித்து கருத்துகளையும் - அவர்களின் பரிந்துரைகளையும் பெற்று **கள ஆய்வு அறிக்கையை ஜூன் 5ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்கும்.**

கள ஆய்வுக்குழுவினரின் வருகையின் போது மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேவையான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் செய்து தர வேண்டும். தொகுதியின் விவரம், வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகள் விவரம், அதிக வாக்குகள் பெற்ற பகுதி, குறைவான வாக்குகள் பெற்ற பகுதி உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் மாவட்டச் செயலாளர்கள் தயாராக வைத்திருந்து குழுவினருக்கு அளிக்க வேண்டும்.

ஆய்வின் போது குழுவினர், மாவட்டச் செயலாளர் - தொகுதிப் பார்வையாளர் - வேட்பாளர் - தொகுதிக்குட்பட்ட செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்களைத் தனித்தனியாக சந்தித்துப பேசுவர். அதோடு மாநகர, ஒன்றிய, நகர , பகுதி , பேரூர் செயலாளர்களையும் தனித் தனியே சந்திப்பர். இச்சந்திப்பின் போது மாவட்டச் செயலாளர், தொகுதிப் பார்வையாளர், வேட்பாளர் உள்ளிட்டவர்கள் உடன் இருக்கக் கூடாது.

அதேபோல, ஒவ்வொரு மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்க் கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனி குழுக்களாகச் சந்தித்து கருத்துக் கேட்க உள்ளனர். அப்பொழுது மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் உடன் இருக்கக் கூடாது.

ஆய்வுக்குழுவின் வருகை தொடர்பாக கழக நிர்வாகிகளுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய முறையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். காலை முதல் மதியத்திற்குள் இந்த சந்திப்பினை நிறைவு செய்து விட்டு மதியத்திற்கு மேல் சார்பு அணிகளைச் சேர்ந்த மாநில - மாவட்ட நிர்வாகிகளை தனித்தனி குழுக்களாக சந்திக்க வேண்டும். அதே போல கிளைச் செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளையும் குழுக்களாக சந்தித்து ஆய்வு செய்ய உள்ளனர்.

ஆய்வுக் கூட்டம் நடைபெறும் நாளில் கூட்டத்தில் கலந்து கொள்ளும் கழக நிர்வாகிகளின் வருகைப் பதிவேடு முறையாக பதிவு செய்ய வேண்டும். மினிட் புத்தகத்திலும் பதிவு செய்து கையொப்பம் பெற வேண்டும்.

| கழக மாவட்டம் | குழு |
|---|---|
| ஈரோடு தெற்கு | சி.வி.எம்.பி.எழிலரசன்<br>மன்னை த.சோழராஜன் |
| ஈரோடு மத்திய | |
| ஈரோடு வடக்கு | |
| நாமக்கல் கிழக்கு | |
| நாமக்கல் மேற்கு | |
| கடலூர் கிழக்கு | எஸ்.டி. இசை<br>ஜெகன் பெரியசாமி |
| நாகப்பட்டினம் | |
| மயிலாடுதுறை | |
| சேலம் கிழக்கு | வழக்கறிஞர் ஏ.சரவணன்<br>நா.இளையராஜா |
| சேலம் மத்திய | |
| சேலம் மேற்கு | |
| இராமநாதபுரம் | ச.முரசொலி, எம்.பி<br>சேலம் உமாராணி |
| தூத்துக்குடி தெற்கு | |
| தூத்துக்குடி வடக்கு | |
| தென்காசி தெற்கு | |
| தென்காசி வடக்கு | |
| சென்னை வடகிழக்கு | எம்.எம்.அப்துல்லா<br>ரேகா பிரியதர்ஷினி |
| சென்னை வடக்கு | |
| திருவள்ளூர் கிழக்கு | |
| திருவள்ளூர் மத்திய | |
| திருவள்ளூர் மேற்கு | |
| சென்னை கிழக்கு | கே.ஈ.பிரகாஷ், எம்.பி.,<br>எஸ்.கே.பி. கருணா |
| சென்னை தெற்கு | |
| சென்னை மேற்கு | |
| கிருஷ்ணகிரி கிழக்கு | சி.என்.அண்ணாதுரை, எம்.பி<br>திருமதி ரத்னா லோகேஸ்வரன் |
| கிருஷ்ணகிரி மேற்கு | |
| தர்மபுரி கிழக்கு | |
| தர்மபுரி மேற்கு | ஜி.செல்வம், எம்.பி.,<br>முத்துவேல் ராமசாமி |
| திருவண்ணாமலை தெற்கு | |
| திருவண்ணாமலை வடக்கு | |
| அரியலூர் | இரா.கிரிராஜன், எம்.பி.,<br>ப.அப்துல் மாலிக் |
| கடலூர் மேற்கு | |
| திருச்சி மத்திய | |
| திருச்சி தெற்கு | |
| பெரம்பலூர் | |
| கன்னியாகுமரி கிழக்கு | சுபா. சந்திரசேகர்<br>டாக்டர் யாழினி |
| கன்னியாகுமரி மேற்கு | |
| திருநெல்வேலி கிழக்கு | |
| திருநெல்வேலி மத்திய | |
| திருநெல்வேலி மேற்கு | |
| கரூர் | டாக்டர் ஆர்.கோகுல்<br>இன்பா ஏ.என். ரகு |
| திண்டுக்கல் கிழக்கு | |
| திருச்சி வடக்கு | |
| புதுக்கோட்டை வடக்கு | |
| சிவகங்கை | எஸ். ஜோயல்<br>டாக்டர் எ.வ.வே.கம்பன் |
| புதுக்கோட்டை தெற்கு | |
| மதுரை மாநகர் | |
| மதுரை வடக்கு | |
| தஞ்சாவூர் தெற்கு | திருமதி மாலதி நாகராஜ்<br>சி.ஆனந்தகுமார் (இளைஞரணி) |
| தஞ்சாவூர் மத்திய | |
| தஞ்சாவூர் வடக்கு | |
| திருவாரூர் | |
| திருப்பூர் கிழக்கு | ப. தாயகம் கவி |
| திருப்பூர் தெற்கு | என். மருது கணேஷ் |
| திருப்பூர் மத்திய | |
| திருப்பூர் வடக்கு | |
| நீலகிரி | |
| இராணிப்பேட்டை | கான்ஸ்டன்டைன்<br>ரவீந்திரன், எம்.பி.,<br>இ.பரந்தாமன் |
| திருப்பத்தூர் | |
| வேலூர் தெற்கு | |
| வேலூர் வடக்கு | |
| கோவை தெற்கு | பரிதி இளம்சுருதி<br>ஜி.பி. ராஜா |
| கோவை மாநகர் | |
| கோவை வடக்கு | |
| திண்டுக்கல் மேற்கு | |
| கள்ளக்குறிச்சி தெற்கு | வழக்கறிஞர் ரவீந்திரன்<br>திருமதி ஜெ.வீரமணி (மாணவரணி) |
| கள்ளக்குறிச்சி வடக்கு | |
| விழுப்புரம் தெற்கு | |
| விழுப்புரம் மத்திய | |
| விழுப்புரம் வடக்கு | |
| தேனி தெற்கு | டாக்டர் அஞ்சுகம் பூபதி<br>க. பிரபு கஜேந்திரன் |
| தேனி வடக்கு | |
| மதுரை தெற்கு | |
| விருதுநகர் தெற்கு | |
| விருதுநகர் வடக்கு | |
| காஞ்சிபுரம் தெற்கு | ஹெலன் டேவிட்சன்<br>கே. இளமகிழன் |
| காஞ்சிபுரம் வடக்கு | |
| சென்னை தென்மேற்கு | |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-05-2026

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

## 'நீட்' தேர்வை ரத்து செய்யக்கோரி

# தமிழ்நாடு முழுவதும் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம்!

## சென்னையில் ஆசிரியர் கி.வீரமணி தலைமையில்

## தொல்.திருமாவளவன் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோர் பங்கேற்பு!

*சென்னை, மே 17 -*

"மாணவர் உரிமை காக்க, மாநில உரிமை காக்க, அரசியலமைப்புச் சட்டத் திரிபுவாதத்தைத் தடுக்க 'இந்தியா முழுமையும் 'நீட்' தேர்வையே முற்றாக ரத்து செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தி, திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று (16.5.2026) தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னையில் கி. வீரமணி அவர்கள் தலைமையில் 'நீட்' தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டரங்கம் அருகில் நேற்று (16.5.2026) காலை 10 மணியளவில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் தொடக்கத்தில் ஒலி முழக்கங்கள் எழுப்பட்டன. திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் சே.மெ. மதிவதினி வரவேற்புரையாற்றினார். திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ், செயலவைத் தலைவர் வழக்குரைஞர் ஆ. வீரமர்த்தினி, பொருளாளர் வீ. குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்





வி.பன்னீர்செல்வம், திராவிட மகளிர் பாசறை மாநில செயலாளர் வழக்குரைஞர் பா.மணியம்மை, வெளியுறவுச் செயலாளர் கோ. கருணாநிதி, திராவிடர் கழக சட்டத்துறை தலைவர் வழக்குரைஞர் த. வீரசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தே.செ. கோபால், வழக்குரைஞர் சு.குமாரதேவன், மாநில இளைஞரணி இணை செயலாளர் வழக்குரைஞர் சோ.சுரேஷ், மாவட்டத் தலைவர்கள் இரா. வில்வநாதன், எண்ணூர் வெ.மு. மோகன், தாம்பரம், ப.முத்தையன், வழக்குரைஞர் தளபதி பாண்டியன், புழல் த. ஆனந்தன், வே. பாண்டு, வெ. கார்வேந்தன், மாவட்ட ச் செயலாளர்கள் செ.ர. பார்த்தசாரதி, ந. இராசேந்திரன், கோ. நாத்திகன், புரசை சு. அன்புச்செல்வன், ஜெ. பாஸ்கரன், க. இளவரசன், க. தமிழினியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**தொல்.திருமாவளவன் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் பங்கேற்பு!**

ஆர்ப்பாட்டத்தின் தொடக்க உரையை திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் ஆற்றினார்.

திராவிடர் இயக்க தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் உமா, மனிதநேய ஜனநாயகக் கட்சியின் மாநில துணைச் செயலாளர் அரிமா அசாருதீன், பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு, எஸ்.டி.பி.அய். கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ஏ.கே ஹரீம், மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் எம். யாக்கூப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் நிஜாமுதின், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ஜி. செல்வா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே. சிவா, ம.திமுக.வின் அரசியல் ஆய்வு மய்யச் செயலாளர் ஆவடி அந்திரிதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொருளாளரும், மேனாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.பாலாஜி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தித் தொடர்புக் குழு தலைவர் மேனாள் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன் ஆகியோர் ஆர்ப்பாட்ட கண்டன உரையாற்றியதை தொடர்ந்து ஒலி முழக்கங்கள் எழுப்பப்பட்ட பின்னர் நிறைவாக ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கண்டன உரையாற்றினார்.

திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் ச. பிரின்ஸ் என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்க, தென் சென்னை மாவட்டத் தலைவர் இரா. வில்வநாதன் நன்றி கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுத்தறிவாளர் கழகப் பொதுச்செயலாளர் ஆ.வெங்கடேசன், பேராசிரியர் ச.இராஜசேகரன், கவிஞர் கண்மதியன் மற்றும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மதிமுக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயகக் கட்சி, எஸ்.டி.பி.அய்., பொதுப் பள்ளிக்கான மாநில மேடை, திராவிட இயக்க தமிழர் பேரவை ஆகிய கட்சிகளின் அனைத்து அணிகளைச் சேர்ந்த தோழர்களும், பொது மக்களும் பெருமளவில் கொடியுடன் 'நீட்' தேர்வை முற்றாக ஒழிக்க வலியுறுத்தி எழுச்சி முழக்கமிட்டு பங்கேற்று சிறப்பித்தனர்.

ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எழுதியுள்ள "நீட்" தகுதி திறமையின் அடையாளமா? ஊழலின் ஊற்றுக் கண்ணா?" என்ற புதிய புத்தகம் ஆர்ப்பாட்டத்தில் வெளியிடப் பட்டது.